අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, (ආදර්ශ ප්‍රශ්න පත්‍රය - 2020)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, (மாதிரி வினாத்தாள் - 2020)
General Certificate of Education (Adv. Level) Examination, (Model Paper - 2020)

| | | |
|---|---|---|
| දේශපාලන විද්‍යාව I<br>அரசியல் விஞ்ஞானம் I<br>Political Science I | 23 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |

அறிவுறுத்தல்கள்:

* இவ்வினாப்பத்திரமானது A மற்றும் B என்ற இரு பகுதிகளை கொண்டிருப்பதுடன் பகுதி A ஆனது 15 பல்தேர்வு வினாக்களையும் பகுதி B ஆனது 10 குறு வினாக்களையும் கொண்டது.
* சகல வினாக்களுக்கும் விடை தருக.
* ஒரு விடைக்கு நான்கு புள்ளிகள் எனும் அடிப்படையில் மொத்தமாக 100 புள்ளிகள் வழங்கப்படும்.
* சகல வினாக்களுக்குமான சரியான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதவும்.

## பகுதி - A

1-15 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் சரியான கூற்றை தெரிவு செய்க.

(01) அரசறிவியலானது

1. சகல மனிதர்களும் பிறப்பிலேயே ஓரளவு அரசியல் ஞானத்தினையுடையவர்களாவர் அவர்கள் அரசியலை பேசுவதும் அதில் ஈடுபடுவதும் இயற்கையானதாகும் என கருதுகோள் முன்வைக்கின்றது
2. அரசியல் முறைமையில் போட்டிச் செயற்பாட்டாளர்களுக்கு மத்தியில் நிலவும் செயற்பாடே இதுவாகும்
3. நோக்கங்களும் வழிமுறைகளும் முரண்பட்ட நிலையில் காணப்படுவதுடன் போராட்ட உருவில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது
4. செயற்பாட்டாளர்களின் நோக்கங்களின் அடைவினை இலக்காக கொண்டுள்ளது
5. மனிதப் பிறவிகளின் ஒழுக்க வாழ்வினை மேம்படுத்துவதனை தனது அடிப்படை பிரச்சினையாக கொண்டுள்ளது (.....)

(02) அரசறிவியலானது

1. அறிவாதார முறையியலுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்
2. அறிவியலுடன் நெருங்கிய தொடரபுடையதாகும்
3. தலையாய விஞ்ஞானமாகவும் உயர் சமூக விஞ்ஞானமாகவும் மேற்தகு விஞ்ஞானமாகவும் கருதப்படுகின்றது
4. மனித அறிவியலைக் கற்றல் மற்றும் கூட்டு இலக்குகளை அடைதல் என்பனவற்றுடன் தொடர்புபடுகின்றது
5. அரசியல் அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் மோதல்களை தீர்த்தல் என்பனவற்றுடன் நேரடித் தொடர்புபடுகின்றது. (.....)

(03) அரசியல் கோட்பாடானது

1. நிச்சயமான தரவுகளையும் காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு அரசியல் நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக கட்டியெழுப்பப்பட்டுள்ள கொள்கைகளாகும்
2. ஆளும் வர்க்கத்தினுடைய அரசியல் கருத்துக்களையே இது குறித்து நிற்கின்றது
3. அரசியல் கருத்துக்களின் வரலாற்றினை அரசியல் கோட்பாடுகள் வெளிப்படுத்துவதில்லை
4. காரண காரியத் தொடர்புகளின் அடிப்படையில் இறுதி முடிவுக்கு வராமை இதன் முக்கிய பண்புகளில் ஒன்றாகும்
5. தற்காலத்தில் விஞ்ஞான ரீதியான கோட்பாடுகளையே அரசறிவியலில் பயன்படுத்த வேண்டும் என குறிப்பிடுகின்றது (.....)

(04) அரசு

1. இளவரசன் எனும் மக்கியாவலியின் நூலில் தான் முதன் முதலில் அரசு(State) என்ற சொல் அறிமுகப்படுத்தப்பட்டது
2. அரசு (Polis) எனப்படுவது நட்குணங்கள் நிறைந்த பெரிய மனிதனாகும் என்பது அரிஸ்டோடிலின் வாதமாகும்
3. அரசு (Polis) எனப்படுவது நல்லதொரு வாழ்கையை அடைய முயலும் கூட்டமைப்பாகும் என்பது பிளேடோவின் வாதமாகும்
4. அரசு (civitas) எனப்படுவது ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பை ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்கப்பட்டதே என்பது சிசரோவின் வாதமாகும் (.....)
5. அரசு (Status) எனப்படுவது நட்குணம் சிறந்த தன்மை இவைகளின் படைப்பு என்பது கால்மாக்சின் வாதமாகும்

(05) சிவில் சமூகம் பற்றிய கிராம்சிய கருத்தாக்கத்தின் முக்கிய அம்சமாக அமைவது

1. உற்பததியோடு இணைந்த உறவுகள், ஒடுக்கு முறை உறவுகள், தனியார் வகை உறவுகள் ஆகியவற்றினை சிவில் சமூகமானது கொண்டமைந்துள்ளது என்பதாகும்
2. அதிகாரம் அரசிடம் குவிந்திருக்கும் என்பதுடன் அரசும் சிவில் சமூகமும் ஒன்று என்பதாகும்
3. அரசு பலமுடையதா அல்லது சிவில் சமூகம் பலமுடையதா என்பது நாட்டிற்கு நாடு சமமானவையாகவே காணப்படும்
4. அரசு அதிரும் போது சிவில் சமூகம் எனும் பலமிக்க உருவம் மறைந்துவிடும்
5. அரசு உற்பத்தி என்ற இரண்டையும் உள்ளடக்கிய எல்லா நிறுவனங்களையும் உறவுகளையும் சிவில் சமூகம் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது என குறிப்பிடுகின்றது (.....)

(06) அரசாங்கமானது

1. முதன்மையான அதிகாரங்களை பெற்ற நிறுவனமாகும்
2. அரசாங்க முழுமையும் அரசின் ஒரு பகுதியாகும்
3. அரசு எனும் நிறுவனத்தின் மூலமே அரசாங்கத்தின் நடவடிக்கைகள் செயலாகின்றன
4. ஒவ்வோர் அரசின் அரசாங்கமும் ஒருமைத் தன்மை வாய்ந்தவையாகும்
5. அரசாங்கத்தின் விதிகளும் மற்றைய சங்கங்களின் விதிகளும் சட்டம் எனும் பெயரிலேயே அழைக்கப்படுகின்றது (.....)

(07) அரசியல் கட்சியானது

1. ஜனநாயக அரசுகளில் மட்டுமே அரசியல் கட்சிகள் செயற்படுகின்றது
2. நவீன ஜனநாயகங்கள் போட்டிகரமான அரசியல் கட்சிகள் இன்றியும் செயற்படும்
3. அரசியல் திட்டத்தின் படி அரசாங்கத்தை நடாத்த விளையும் மக்கள் குழுவாகும்
4. இவை ஒழுங்கமைந்த நிறுவனங்களாக காணப்படுவதோடு மேற்கத்தேய நாடுகளிலும் இலங்கையிலும் சங்கங்களாகவே காணப்படுகின்றன.
5. இப்பதமானது பழைமை வாய்ந்த ஒன்றாகும் (.....)

(08) ஒற்றையாட்சி அரசாங்க மாதிரியானது

1. இவ் அரசாங்க மாதிரியில் பிராந்தியங்களின் ஒப்பீட்டு ரீதியான சுயாதீன நிலை பாதுகாக்கப்படும்
2. ஐக்கியத்தன்மை, பிரதேச பல்வகைத் தன்மைகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது
3. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் பிரதேச முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் என்ற இரு நிகழ்ச்சி நிரல்களில் அதிகாரமானது காணப்படும்
4. அரசியல் திட்டத்தின் மேலான்மை குறைந்த மட்டத்தில் காணப்படும் (.....)
5. நாடுகளின் ஐக்கியமாகவே காணப்படும்

(09) ஜனாதிபதி அரசாங்க மாதிரியானது

1. நாட்டின் தலைவர் பொருப்புக்களிலிருந்து விலகியிருக்கும் அரசாங்க மாதிரியாக சுட்டிக்காட்டப்படுகின்றது
2. சட்டமன்றிற்கு பொருப்புக் கூறும் வகையில் அமைச்சர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும்
3. அரசின் நிறைவேற்று அதிகார பீடமாக பாராளுமன்றமே இவ் அரசாங்க மாதிரியில் காணப்படும்
4. சட்டமன்றம் இயங்குவதற்குத் தேவையான பெரும்பான்மை இல்லாத போது நாட்டின் நிறைவேற்றுத்துறை ஸ்தம்பிதம் அடையும்
5. அனைத்து நிறைவேற்று அதிகாரங்களும் ஜனாதிபதியிடம் குவிந்துள்ள ஓர் ஆட்சிமுறையாகும் (.....)

(10) தாராளவாத கருத்தியலானது

1. சொத்து முறை தொடர்பான சமூக பொது உரிமையினை அங்கீகரிக்கின்றது
2. உழைப்புச் சுரண்டல், வறுமை மற்றும் சமூக சமத்துவமின்மையை முடிவுக்கு கொன்டுவந்துள்ளது
3. செல்வம் மற்றும் வருமானங்களை சமூகத்திற்கு மீள பகிர்ந்தளிக்க வேண்டும் என வழியுறுத்துகின்றது
4. தனியாள் சதந்திரம் என்பது அரசுக்கும் இனத்திற்கும் தலைவனுக்கும் நிபந்தனையின்றி காட்டும் அடிபனிவின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது
5. அரசாட்சி முறைக்கு நேரெதிரானதாகும் (.....)

(11) தேசியவாத கருத்தியலானது

1. சுய நிர்ணய உரிமை என்பது இக்கருத்தியலுடன் தொடர்புபட்ட பிரதான எண்ணக்கருவாகும்
2. அறநெறிச் சார்பின்மை மற்றும் சர்வ அறநெறிகளின் கூட்டு ஆகிய தத்துவங்களை உள்ளடக்கியுள்ளது
3. தந்தைவழி தலைமைத்துவத்தினை முற்றாக ஒழிக்க வேண்டும் என வழியுறுத்துகின்றது
4. அரசு எந்தவொரு சமயத்திற்கும் பக்கச்சார்பாக இருக்கக் கூடாது என குறிப்பிடுகின்றது
5. தனியார் சொத்து முறைக்கு எதிராக முதன் முதலாக தோற்றம் பெற்றது (.....)

(12) தாராண்மை பெண்ணிலைவாதமானது

1. கர்ப்பத்தடைக்கான கட்டுப்பாடின்மை, பிரசவ விடுமுறை, கூட்டுப் பிள்ளை பராமரிப்பு, தேசிய பெண்கள் அமைப்பு போன்றனவற்றை தனது கோரிக்கைகளாக கொண்டமைந்திருந்தது
2. குட்டி முதலாளித்துவ ஸ்தாபனங்களான குடும்பம், தனிச்சொத்து என்பனவற்றை அழித்து அவ்விடங்களில் பொது மையப்படுத்தப்பட்ட ஸ்தாபனங்களை உருவாக்க வேண்டும் எனப் பணிக்கின்றது
3. மறு உற்பத்தி முறையில் பெண்கள் வகிக்கும் பங்கே அவர்களின் கீழ்மை நிலைக்கு காரணமாகும் என்பது இதன் வாதமாகும் (.....)
4. பெண்களின் கீழ் நிலைக்கு காரணம் உயிரியல் ரீதியான அமைவன்று மாறாக உளவியல் ரீதியான காரணமாகும் எனக் கருதுகின்றது
5. குடும்ப வேலைக்குரிய சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது

(13) நேர்கனிய முரண்பாடு எனப்படுவது

1. முரண்பாடு முடிவுக்கு கொண்டுவரப்படாததோடு மேலும் விருத்தியடைந்து புதிய சக்தி மற்றும் இயக்கத்தன்மை ஒன்றை கைப்பற்றிக்கொள்ளும்
2. வாழ்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு அபிலாசைகளை அடிப்படையாக கொண்டு உள்ளத்தில் முரண்பாடுகள் ஏற்படல் மனிதனின் இயற்கை அனுபவமாகும் எனக் குறிப்பிடுகின்றது
3. உலகில் காணப்படும் பெரும்பாலான முரண்பாடுகள் இவ்வகை முரண்பாடுகளாகவே சுட்டிக்காட்டப்படுகின்றது (.....)
4. இம் முரண்பாடுகள் இனத்துவம், சமயம், மொழி, வரலாறு, உரிமை எனும் அடிப்படையில் தோன்றியுள்ளதுடன் அவற்றுள் சில நீடித்த சமூக முரண்பாடுகளாக உருவெடுத்துள்ளன
5. முரண்பாட்டிற்கு பங்களித்த காரணங்களை தீர்த்துக்கொள்வதற்கான ஒற்றுமையாகவும் ஆக்கபூர்வமாகவும் செயற்படுவதற்கு தரப்புக்களுக்கு வாய்பினை வழங்குகின்றது

(14) இணக்கப்படுத்தலானது

1. இது ஓர் இடைத் தரகு செயற்பாடாக சுட்டிக்காட்டப்படுகின்றது
2. முரண்பாடொன்று ஒருதலைப்பட்சமாக முடிவுக்கு வருவதனை குறிப்பிடுகின்றது
3. நிலையான சமாதானம் என்பதே இதன் பயன்பாட்டு அர்த்தமாகும்
4. சுகப்படுத்தல் செயன்முறையை கட்டியெழுப்புவதை அடிப்படையாக கொண்டமைந்துள்ளது
5. முரண்பாட்டுத் தரப்புக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்றினை தேடுவதை குறிப்பிடுகின்றது (.....)

(15) வலுப்பிரிவனையானது

1. அதிகாரத்தின் ஒழுங்கமைந்த தன்மை மற்றும் சுதந்திரத்திற்கிடையில் தொடர்புண்டு எனக் குறிப்பிடுகின்றது
2. சட்டத்தின் மேன்மை எனும் சட்டவாட்சியினை மேலான வகையில் ஏற்றுக்கொள்கின்றது
3. வாக்காளர்களுக்கு உண்மையான தெரிவினை வழங்க வேண்டும் என வலியுறுத்தகின்றது
4. அரசாங்க அதிகாரிகளின் நடத்தைகளை உறுதிப்படுத்துவதற்கான ஒழுக்கநெரிக் கோவைகளை குறிப்பிடுகின்றது (.....)
5. குடித்தொகையில் மூத்த பிரிவினர்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது

## பகுதி - B

(16) அரசறிவியலை கற்றல் எனும் விடயத்தில் பல்வேறு விடயப்பரப்புக்கள் பரவலடைந்து வந்துள்ளன. அவற்றுள் இரண்டினை தருக

.................................................................................................................................

.................................................................................................................................

(17) அரசியல் ஆய்வின் போது பெண்ணியல்வாதம் எழுப்பும் பிரச்சினைகள் மரபுகள் அரசியல் பிரச்சினைகளை விட வேறுபட்டதாகும். அவற்றுள் இரண்டினை குறிப்பிடுக

.................................................................................................................................

.................................................................................................................................

(18) அரசியல் கற்கையோடு தொடர்புடைய பிரதான நிறுவனங்களுள் இரண்டினை தருக

.................................................................................................................................

.................................................................................................................................

(19) அரசு அரசாங்கம் ஒழுங்கமைந்திருக்கும் விதத்தினை பிரதானமாக நான்கு கருப்பொருள்களில் அடையாளப்படுத்தலாம். அவற்றுள் இரண்டினை தருக

.................................................................................................................................

.................................................................................................................................

(20) பின்வரும் நூலினை மற்றும் கட்டுரையினை எழுதிய நூலாசிரியர்களை முறையே தருக

தேசிய அரசுகளின் முடிவு: ...............................................................

பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் சமூகங்களின் அரச பின் காலனித்துவம்:.......................................

(21) ஒரு நபர் ஒரு அரசின் பிரஜை என்ற அந்தஸ்தினை பல்வேறு காரணங்களால் இழக்க நேரிடுகின்றது. அவற்றுள் இரண்டினை தருக

.................................................................................................................................

.................................................................................................................................

(22) கூட்டுச் சமஷ்டியானது சில ஆழமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றுள் இரண்டினை தருக.

.................................................................................................................................

.................................................................................................................................

(23) குடியரசுவாதக் கருத்தின் வளர்ச்சியை நான்கு கட்டங்களில் காட்ட முடியும். அவற்றுள் இரண்டினை தருக.

.................................................................................................................................

.................................................................................................................................

(24) தேசியவாதம் கருத்தியலாகவும் அரசியல் இயக்கமாகவும் பிரதான இரண்டு தன்மைகளில் காணப்பட்டது. அவற்றினை தருக

.................................................................................................................................

.................................................................................................................................

(25) முரண்பாடுகளின் தன்மையினை மையப்படுத்தி பேராசிரியர் பீட்டர் வலன்ஸ்டைன் முரண்பாட்டினை மூன்று வகைப்படுத்துகின்றரர். அவற்றுள் இரண்டினை தருக.

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே சொந்தம் - அல்ஹம்துலில்லாஹ்.

சம்மாந்துறை பிறைட் கல்வியகத்தில் கலைப்பிரிவில் அரசியல் விஞ்ஞானத்தினை ஒரு பாடமாக கற்கும் மாணவர்களே

கிழக்கு மாகாணத்தில் முதல் பட்டதாரியை (எம்.ஏ. அப்தல் மஜீட் - BA) பெற்றெடுத்த பிரதேசமான சம்மாந்துறை பிரதேசத்தில் ச.துறை - அல் அர்ஷத் மஹா வித்தியாலயத்தில் கல்வி கற்று 2004ஆம் ஆண்டு எனது உயர்தரப் பெறுபேறு வெளியாகிய காலப்பகுதியில் இருந்து நான் கற்ற பாடசாலையில் எனது அரசியல் விஞ்ஞான கற்பித்தல் பணியை ஆரம்பித்து இற்றைவரைக்கும் வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றேன். அல்ஹம்துலில்லாஹ்

அல்லாஹ் எனக்கு தந்த அருட்கொடையினால் என்னிடம் அரசியல் விஞ்ஞானப் பாடத்தினை கற்ற பல்வேறு மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளதுடன் அவ்வாறான மாணவர்களுள் சில மாணவர்கள் அம்பாரை மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம் நிலைகளை பெற்றுள்ளனர். அந்தவகையில்,

1. எம்.ஏ. பாத்திமா மிபாஸா - 2007(மாவட்டத்தில் 1ஆம் நிலை 1st Rank)
2. வி.ரி. ஹஸீனா - 2009(மாவட்டத்தில் 1ஆம் நிலை 1st Rank)
3. ஏ.எச். பசீறா - 2013 (குருத்தலாவையில் இருந்து உயர்தர கற்கைக்காக சம்மாந்துறைக்கு வந்து கற்று அம்பாரை மாவட்டத்தில் 1ஆம் நிலை 1st Rank ....
4. ஏ.ஏ பாத்திமா ஜஹான் - 2014 (மாவட்டத்தில் 2ஆம் நிலை 1st Rank)

******

மேற்குறிப்பிட்ட மாணவர்களுக்கு மேலாக 2006ஆம் ஆண்டில் இருந்து இற்றை வரைக்குமான ஒவ்வொரு ஆண்டுகளிலும் மாவட்ட மட்டத்தில் 3,5,8,9,10,11ஆம் நிலைகளை பெற்ற பல்வேறு மாணவர்களும் உள்ளனர்.

அது மட்டுமன்றி 2001(முனவ்வறா), 2005(யு.எல். றிஸானா), ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அம்பாரை மாவட்டத்தில் 1ஆம் நிலையினையும் 2006ஆம் ஆண்டு தேசிய ரீதியில் (ஏ.எச். பிர்னாஸ்) 2ஆம் நிலையினையும் பெற்று எமது பிரதேசமான சம்மாந்துறைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

அந்த வகையில் தற்போது உலகலாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள கொவிட் - 19 என்ற வைரஸ் தொற்றினால் எமது நாட்டில் பல்வேறு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைதுள்ள இச் சந்தர்ப்பத்தில் அல்லாஹ்வின் உதவியால் நான் உங்களுக்கு இனையவழி கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள தீர்மானித்துள்ளேன்.

எனவே அன்பிற்குரிய மாணவர்களே 2021ஆம் ஆண்டில் நடைபெறுகின்ற உயர்தர பரீட்சையில் நீங்கள் உங்களது முன்னோர்கள் பெற்ற நல்ல பெறுபெறுகளைப் போன்று நீங்களும் பெற்று எமது மண்பதிக்கு பெருமை சேர்க்க அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக - ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன்

உங்கள் ஆசான்
எம்.ரி. அஸ்மீர்
அரசியல் விஞ்ஞான முன்னாள் உதவி விரிவுரையாளர் (2009-2011)
இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
அரசியல் விஞ்ஞான வளவாளர் - குருத்தலாவை தேசிய பாடசாலை